DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022 ம் ஆண்டு மே மாதம் 12 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | -திரு. சதீஸ் | **PW-23** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

முதல் விசாரணை:-

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2012 ம் ஆண்டு போகனப்பள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். கட்டிகாணப்பள்ளியின் கூடுதல் பொறுப்பையும் கவனித்து வந்தேன். அப்போது கட்டிகாணப்பள்ளி கிராம உதவியாளராக ஜம்ருதீன் என்பவர் இருந்தார். கடந்த 22.08.2012 ம் தேதி கம்பையநல்லூர் காவல் நிலையத்திலிருந்து போலீசார் கட்டிகாணப்பள்ளி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்தார்கள். போலீசார் என்னிடம் சக்திவேல் மகன் பாலாஜி என்பவரை TNPSC Group 2 தேர்வு வினாத்தாள் வெளியானது தொடர்பாக விசாரிக்க வேண்யுடும் என்று சொன்னார்கள். அதன்பேரில் நானும், எனது உதவியாளரும் கிருஷ்ணகிரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் இருக்கும் பாலாஜி என்பவரது வீட்டுக்கு அருகில் வைத்து

சக்திவேல் மகன் பாலாஜி மற்றும் எல்ஐசி மனோகரன் ஆகியோரை என்னுடன் வந்த போலீசார் விசாரித்தனர். விசாரணையின்போது சக்திவேல் மகன் பாலாஜி மற்றும் எல்ஐசி மனோகர் ஆகியோர் 12.08.2012 ம் தேதி TNPSC Group 2 தேர்வை எழுதி வந்ததாகவும், சக்திவேல் மகன் பாலாஜி அன்று மாலை சோகமாக இருந்ததாகவும், அவர் அவருடைய நண்பரான மற்றொரு பாலாஜியிடம் TNPSC Group 2 வினாத்தாள் வெளியானது தொடர்பாக தமிழ்நாடு முழுவதும் போலீசார் விசாரித்து வருவதாகவும், போலீசார் கேட்டால் எதுவும் சொன்னதாகவும் சொன்னார். விசாரணையை முடித்து விட்டு போலீசாரும், நானும் வந்து விட்டோம். மறுநாள் காலை 23.08.2012 ம் தேதி காலை 5 மணிக்கு கம்பையநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் போலீசார் என்னையும், கிராம உதவியாளரையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பிற்கு வரச் சொன்னார்கள். நான் அங்கு சென்றதன் பேரில் நான், என்னுடைய உதவியாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் ராகவேந்திரன் என்பவர் மகன் பாலாஜி என்பவர் வீட்டிற்கு சென்றோம்(தற்போது சாட்சி சக்திவேல் மகன் பாலாஜி என்று கூறுகிறார்). அங்கு காவல் ஆய்வாளர் மேற்படி சக்திவேல் மகன் பாலாஜியை விசாரித்தார். அப்போது மேற்படி பாலாஜி தானாக முன்வந்து தேர்விற்கு முன்பே தன்னுடைய நண்பர் மூலமாக TNPSC Group 2 வினாத்தாளை வாங்கி,அதைப் படித்து தேர்வு எழுதியதாக சொன்னார். காவல் ஆய்வாளர் அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் பாலாஜியிடம் கையெழுத்து பெற்றார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் ஜம்ருதீன் என்பவரும் கையொப்பம் செய்தோம். மேற்படி பாலாஜி சொன்ன தகவலின் அடிப்படையில் அவரது வீட்டின் அறையிலிருந்து ஒரு செல்போன், TNPSC Group 2 வினாத்தாள், 59 தாள்கள் கொண்ட கையால் எழுதப்பட்ட புகைப்பட நகல் ஆகியவற்றை மகசரில்

கைப்பற்றினார்கள். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.**21 ஆகும். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.**22 ஆகும். 59 பக்கங்கள் கொண்ட கையால் எழுதப்பட்ட வினாத்தாளின் புகைப்பட நகல்(சான்றிட்ட நகல்) **அ.சா.ஆ.**23 ஆகும். TNPSC Group 2 வினாத்தாள் அசல் **அ.சா.ஆ.**24 ஆகும். செல்போன் **சா.பொ.**15 ஆகும். சக்திவேல் மகன் பாலாஜி என்பவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி ஆஜரில் இல்லை, வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்). இது தொடர்பாக காவல் ஆய்வாளர் மற்றும் சிபிசிஐடி துணைக்காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் என்னை விசாரித்தனர்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.**

**25 ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்தார், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26, 27, 28, 29 மற்றும் 30 எதிரி ஆகியோர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.**

**2, 3, 10, 13, 14, 15, 16, 17, 20, 21 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**